

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், உடல்நலக்குறைவால் மறைவெய்திய தேசிய முற்போக்கு திராவிடக் கழக தலைவர் கேப்டன் விஜயகாந்த் அவர்களின் உடல் நல்லடக்கம் செய்யப்படும் இடத்திற்கு நேற்று முன்தினம் (29.12.2023) நேரில் சென்று அவரது உடலுக்கு மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தி, தமிழ்நாடு அரசின் சார்பில் அளிக்கப்பட்ட அரசு இறுதி மரியாதை நிகழ்வில் கலந்து கொண்டார். உடன் கழக நாடாளுமன்ற குழுத் தலைவர் டி.ஆர். பாலு எம்.பி. நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், சட்டமன்ற உறுப்பினர் வி.ஜி.ராஜேந்திரன் ஆகியோர் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (30.12.2023) முகாம் அலுவலகத்தில், முன்னாள் அமைச்சர் மறைந்த ஆலடி அருணா அவர்களின் மகன் ஆலடி எழில்வாணன் எழுதிய, “வியப்புரை – ஓர் இரசிகனின் பார்வை” என்ற ஆர்.பாலகிருஷ்ணன் எழுதிய “ஒரு பண்பாட்டின் பயணம் – சிந்து முதல் வைகை வரை” என்ற நூலின் கருத்தாக்க நூலினை வெளியிட்டார். உடன் நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, மாநில திட்டக்குழு துணைத் தலைவர் பேராசிரியர் ஜெ.ஜெயரஞ்சன், ஆர்.பாலகிருஷ்ணன், (ஓய்வு), ரோஜா முத்தையா நூலகத்தின் இயக்குநர் சுந்தர், எமரால்டு பதிப்பகத்தின் உரிமையாளர் கோ. ஒளிவண்ணன், நூலாசிரியர் ஆலடி எழில்வாணன், அருணன் ஆகியோர் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், உடல்நலக்குறைவால் மறைவெய்திய தேசிய முற்போக்கு திராவிடக் கழக தலைவர் கேப்டன் விஜயகாந்த் அவர்களின் உடல் நல்லடக்கம் செய்யப்படும் இடத்திற்கு நேற்று முன்தினம் மாலை (29.12.2023) நேரில் சென்று அவரது உடலுக்கு மலர்வளையம் வைத்து இறுதி மரியாதை செலுத்தினார்.

### தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்தின் உடல்

# அரசு மரியாதையுடன் சிறந்த முறையில் அடக்கம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு பிரேமலதா விஜயகாந்த் நன்றி!

சென்னை, டிச.31-

தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்த் உடலுக்கு அரசு மரியாதை வழங்கிய முதல்வர் அவர்களுக்கு நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன் என்று திருமதி பிரேமலதா விஜயகாந்த் தெரிவித்துள்ளார்.

பிரேமலதா விஜயகாந்த், தே.மு.தி.க. தொண்டர்கள், பொதுமக்களுக்கு இரு கரம் கூப்பி நன்றி தெரிவித்துக் கொள்கிறேன் என்றும், அனைத்து அரசியல் கட்சி தலைவர்களுக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன் என்றும் குறிப்பிட்டார்.

மறைந்த விஜயகாந்தின் உடல் அரசு மரியாதையுடன் தே.மு.தி.க. அலுவலகத்தில் அடக்கம் செய்யப்பட்டது.

இதைதொடர்ந்து, பிரேமலதா விஜயகாந்த் செய்தியாளர் சந்திப்பில் பேசியதாவது:-

விஜயகாந்தின் உடல் அரசு மரியாதையுடன் சிறந்த முறையில் அடக்கம் செய்யப்பட்டுள்ளது. தீவுத்திடலில் இடம் ஒதுக்கீடு கொடுத்து, உதவி செய்த முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், உதயநிதி ஸ்டாலின் உள்ளிட்ட அமைச்சர்களுக்கு தே.மு.தி.க. சார்பில் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

பாதுகாப்பு வழங்கிய அனைத்து காவல்துறையினருக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். தே.மு.தி.க. தொண்டர்கள், பொது மக்களுக்கு இரு கரம் கூப்பி நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். அனைத்து அரசியல் கட்சி தலைவர்களுக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.இவ்வாறு அவர் குறிப்பிட்டிருந்தார்.

### ரூ.7 கோடியில் புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல்!

# கள்ளிமந்தையத்தில் ரூ.49.50 இலட்சத்தில் புதிய மின்பாதை!

## அமைச்சர் அர.சக்கரபாணி தொடங்கி வைத்தார்!

திண்டுக்கல், டிச.31-

உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி, திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பகுதிகளில், ரூ.49.50 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்ட புதிய மின்னூட்டி, மின்பாதையை தொடங்கி வைத்து, ரூ.7.00 கோடி மதிப்பீட்டில் பல்வேறு இடங்களில் புதிய திட்டப்பணிகளுக்கு 28.12.2023 அன்று அடிக்கல் நாட்டினார்.

இந்நிகழ்ச்சியில், அமைச்சர் அர.சக்கரபாணி தெரிவித்ததாவது:-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்றது முதல் எல்லோருக்கும் எல்லாம் கிடைக்கும் வகையில் சிறப்பான ஆட்சி செய்து கொண்டிருக்கிறார். தமிழக மக்களின் நலனுக்காக பல்வேறு திட்டங்களை அறிவித்து தொடர்ந்து செயல்படுத்தி வருகிறார்கள்.

திண்டுக்கல் மின் பகிர்மான வட்டம், ஒட்டன்சத்திரம் கோட்டம், கள்ளிமந்தையம் உபகோட்டம், பருத்தியூர், பாலப்பன்பட்டி, புளியம்பட்டி, குப்பாயிவலசு, பில்லாகாட்டு வலசு. குமாரசாமி கவுண்டன் வலசு. கருங்கோண வலசு, கொத்தையம், மற்றும் தேவத்தூர் ஆகிய கிராமங்களின் மின் தேவையை தடையின்றி வழங்குவதற்காகவும், சீரான அளவில் மின்னழுத்தம் வழங்கும் பொருட்டும் சுமார் ரூ.49.5 இலட்சம் மதிப்பீட்டில், 110/22 கி.வோ. கள்ளிமந்தையம் துணை மின்நிலையத்தில் புதிதாக பருத்தியூர் மின்னூட்டி ஒன்று நிறுவப்பட்டுள்ளது. மேலும் மேற்கண்ட மின்னூட்டியின் வழியாக மின்சாரம் கொண்டு செல்வதற்காக கள்ளிமந்தையம் துணை மின் நிலையம் முதல் அரண்மனை வலசு வரை சுமார் 86 மின்கம்பங்கள் மற்றும் 3.75 கி.மீட்டர் நீளத்திற்கு புதிதாக மின்பாதை அமைக்கப்பட்டுள்ளது. இதுவரையில் பொருளூர் மின்பாதை சுமார் 183 மின்மாற்றி களுக்கு மின்விநியோகம் வழங்கப்பட்டு வந்த நிலையில் தற்போது புதிதாக அமைக்கப்பட்டுள்ள பருத்தியூர் மின்பாதை வழியாக சுமார் 62 மின்மாற்றிகளுக்கு அதிக மின்பளு ஏற்படாத வகையில் மின்சாரம் பிரித்து வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தென்மாவட்டங்களில் ஏற்பட்ட மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதி மக்கள் மின்தடை காரணமாக பெரும் சிரமப்பட்டதாக தெரிவித்துள்ளனர். எனவே, மழை காலங்களில் மின் விநியோகத்தில் எவ்வித தடையுமின்றி வழங்கும் வகையில் மின்கம்பங்கள், தாழ்வான பகுதிகளில் உள்ள மின்மாற்றிகள் மேடான பகுதிகளுக்கு மாற்றி அமைக்க வேண்டும். எந்தவொரு இயற்கை பேரிடர் ஏற்பட்டாலும், எவ்வித தடையுமின்றி மின் விநியோகம் செய்யும் வகையில் மின்கம்பங்கள், மின்மாற்றிகளை அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஒட்டன்சத்திரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பகுதிகளில், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித்திட்டத்தின் கீழ், கேதையறும்பு ஊராட்சியில் பழையபட்டியில் 2 இடங்களில் சிமெண்ட் சாலை, தடுப்பணை, சிறு பாலம், 6 இடங்களில் பேவர் பிளாக், தேவச்சின்னாம்பட்டியில் 2 இடங்களில் தடுப்பணை, கொல்லபட்டியில் 3 இடங்களில் தடுப்பணை, கேதையறம்பு, திருமாணிக்கபுரத்தில் தானிய கிடங்கு ஆகிய பணிகள் ரூ.1.02 கோடி மதிப்பீட்டிலும், கொ.கீரனூார் ஊராட்சியில் கொ.கீரனூாரில் 5 இடங்களில் சிமெண்ட் சாலை, பேவர் பிளாக், பெருமாள்கவுண்டன் வலசில் சிறுபாலம், பேவர் பிளாக், மெட்டல் சாலை, கொ.கீரனூார் மற்றும் இடையன்வலசில் உணவு தானிய கிட்டங்கி ஆகிய பணிகள் ரூ.70.94 இலட்சம் மதிப்பீட்டிலும், மண்டவாடி ஊராட்சியில் சி.க.வல சில் 3 இடங்களில் சிமெண்ட் சாலை, 2 இடங்களில் பேவர் பிளாக், மெட்டல் சாலை, மண்டவாடியில் ஊராட்சி மன்ற அலுவலக கட்டடம், சிமெண்ட் சாலை, பேவர் பிளாக், கருப்பண கவுண்டன்புதூரில் 3 இடங்களில் சிமெண்ட் சாலை, பேவர் பிளாக், சின்ன மண்டவாடியில் 4 இடங்களில் சிமெண்ட் சாலை, தானிய கிட்டங்கி, நவக்காணியில் 2 இடங்களில் சிமெண்ட் சாலை ஆகிய பணிகள் ரூ.1.25 கோடி மதிப்பீட்டிலும், அம்பிளிக்கை ஊராட்சியில் ஆலயகவுண்டன் பட்டி, அம்பிளிக்கை, சாணார்பதி ஆகிய 3 இடங்களில் சிமெண்ட் சாலை, அம்பிளிக்கையில் 2 பாலம், பேவர் பிளாக், மெட்டல் சாலை ஆகிய பணிகள் ரூ.1.46 கோடி மதிப்பீட்டிலும், சிந்தலப்பட்டி ஊராட்சியில் சிந்தலப்பட்டியில் ஊராட்சி மன்ற அலுவலக கட்டடம், சிமெண்ட் சாலை, சிறு பாலம், 3 இடங்களில் பேவர் பிளாக் ஆகிய பணிகள் ரூ.59.83 இலட்சம் மதிப்பீட்டிலும் அமைக்க (28.12.2023) அன்று அடிக்கல் நாட்டப்பட்டு, பணிகள் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

மேலும், மாவட்ட கனிமவள நிதியிலிருந்து, வெரியப்பூர் ஊராட்சியில், வெரியப்பூர், பொன்னிகாளியம்மன் புதூர், மூனுார், வெள்ளியன்வலசு ஆகிய இடங்களில் சமையலறை கட்டடம், தடுப்பணை, சிமெண்ட் சாலை ஆகிய பணிகள் ரூ.71.70 இலட்சம் மதிப்பீட்டிலும், ஓடைப்பட்டி ஊராட்சியில், ஓடைப்பட்டி, பழனிக்கவுண்டன்புதூர், சக்கம்பட்டி, பொன்னியாக்கவுண்டன்வலசு ஆகிய இடங்களில் சிமெண்ட் சாலை, மழைநீர் வடிகால் வாய்க்கால், பெவர் பிளாக் ஆகிய பணிகள் ரூ.64.76 இலட்சம் மதிப்பீட்டிலும், அம்பிளிக்கை ஊராட்சியில், அம்பிளிக்கை, ஆலயகவுண்டன்பட்டி, பூலாம்பட்டி ஆகிய இடங்களில் சிமெண்ட் சாலை, நியாய விலைக் கடை கட்டடம் ஆகிய பணிகள் ரூ.58.65 இலட்சம் மதிப்பீட்டிலும் மேற்கொள்ள இன்று அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது. ஆகமொத்தம் இன்றையதினம், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித்திட்டம் மற்றும் மாவட்ட கனிமவள நிதியிலிருந்து ரூ.7.00 கோடி மதிப்பீட்டில் பல்வேறு பணிகள் மேற்கொள்ள அடிக்கல் நாட்டப்பட்டு, பணிகள் தொடங்கி வைக்கப்பட்டுள்ளன. தமிழ்நாடு முதலமைச்சர் ஆட்சிப்பொறுப்பேற்ற 30 மாத காலத்தில் தமிழக மக்களுக்கா பல்வேறு திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகிறார். அவருக்கு என்றும் உறுதுணை யுடன் இருக்க வேண்டும், என உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திலகவதி, ஒட்டன்சத்திரம் ஊராட்சி ஒன்றியக்குழு தலைவர்.அய்யம்மாள், ஊராட்சி ஒன்றியக்குழு துணைத்தலைவர் காயத்ரிதேவி, பழனி வருவாய் கோட்டாட்சியர்சரவணன், மின்வாரிய மேற்பார்வை பொறியாளர் அன்பழகன், பழனி கோட்ட மின்வாரிய செயற்பொறியாளர் பிரகாஷ்பாபு, மின்வாரிய செயற்பொறியாளர் கமலக்கண்ணி, வாடிப்பட்டி ஊராட்சி மன்ற தலைவர் ஜோதீஸ்வரன், உள்ளாட்சி பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

### குஜராத்தில் மிகப்பெரிய அளவில்

# போதைப்பொருள் பயன்பாடு அதிகரிப்பு!

## வெளிச்சத்திற்கு வந்த அதிர்ச்சித் தகவல்!

காந்திநகர், டிச. 31-

ஒன்றிய சமூகநீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகம் கீழ் வெளியான புள்ளி விவரங்களின்படி, கடந்த 5 ஆண்டுகளில், பா.ஜ.க. ஆளும் குஜராத்தில் மாநிலத்தில் போதைப்பொருள் பயன்பாடு மிகப்பெரிய அளவில் அதிகரித்துள்ளதாக கூறப்பட்டுள்ளது.

2018 முதல் 2022 ஆண்டு வரை, வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத வகையில், குஜராத்தில் மட்டும் கஞ்சா, கோகைன் உள்பட மொத்தம் 93 ஆயிரத்து 691 கிலோ போதைப்பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. குறிப்பாக 2022 ஆம் ஆண்டு, நாடு முழுவதும் 71 கிலோ கோகைன் போதைப்பொருள் பறிமுதல் செய்யப்பட்டது. அதில், 39 கிலோ குஜராத்தில் மட்டுமே கைப்பற்றப்பட்டுள்ளது.

இதேபோல், போதைப் பொருள் பழக்கத்திற்கு அடிமையாளர்கள் எண்ணிக்கையும் குஜராத்தில்தான் மிக அதிகமாக இருக்கும் அதிர்ச்சித் தகவலும் வெளியாகி உள்ளது. 19 லட்சத்து 20 ஆயிரம் குஜராத் மக்கள் போதைக்கு அடிமையாகி உள்ளனர். அதில், 17 லட்சத்து 35 ஆயிரம் பேர் ஆண்கள் ஆவர். குஜராத்தில் ஒரு லட்சத்து 85 ஆயிரம் பெண்கள் போதைப்பொருளுக்கு அடிமையாகி இருப்பதும் புள்ளி விவரங்கள் மூலம் தெரியவந்துள்ளது.

### மாநில அவசர கால செயல்பாட்டு மையம் மூலம் நிலைமை தொடர்ந்து கண்காணிப்பு!

# தென் மாவட்டங்களில் கனமழை எச்சரிக்கை!

## வருவாய் – பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.இராமச்சந்திரன் அறிவிப்பு!

சென்னை, டிச. 31-

தென் மாவட்டங்களில் கனமழை எச்சரிக்கை குறித்து வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் அறிக்கை விடுத்துள்ளார்.



அவ்வறிக்கை வருமாறு:-

மேற்கு மத்திய இந்திய பெருங்கடல் மற்றும் அதனை அடுத்துள்ள தென் கிழக்கு அரபிக்கடல் பகுதிகளில் மேலடுக்கு காற்றழுத்த சுழற்சியின் காரணமாக அரபிக்கடல் பகுதியில் காற்றழுத்த தாழ்வு நிலை உருவாகக் கூடும் என்றும், 29.12.2023 அன்று கன்னியாகுமரி, திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் தென்காசி மாவட்டங்களிலும், 01.01.2024 மற்றும் 02.01.2024 ஆகிய நாட்களில் கன்னியாகுமரி, திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களிலும் ஓரிரு இடங்களில் கனமழை பெய்யக்கூடும் என்று இந்திய வானிலை ஆய்வு மையம் 29.12.2023 நாளிட்ட அறிவிக்கையில் தெரிவித்திருந்தது. இன்று (30.12.2023) காலை 8.30 மணி அளவில் மேற்கு மத்திய இந்தியப் பெருங்கடல் மற்றும் அதனை அடுத்துள்ள தென் கிழக்கு அரபிக்கடல் பகுதியில் காற்றழுத்த தாழ்வு நிலை உருவாகியுள்ளது என்றும், இது மேற்கு வட மேற்கு திசையில் நகர்ந்து மேலும் தீவிரமடைந்து, அடுத்த 48 மணி நேரத்தில் தெற்கு அரபிக் கடல் மற்றும் அதனை அடுத்துள்ள மேற்கு மத்திய இந்தியப் பெருங்கடல் பகுதியில் ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு பகுதியாக வலுப்பெறும் என்றும், இந்திய வானிலை ஆய்வு மையம் தனது 30.12.2023 நாளிட்ட அறிவிக்கையில் தெரிவித்துள்ளது.

கடந்த 24 மணி நேரத்தில் (30.12.2023 8.30 மணி வரை) தமிழ்நாட்டில் 14 மாவட்டங்களில் சராசரியாக 0.16 செ.மீ. மழை பதிவாகியுள்ளது. குறிப்பாக, திருநெல்வேலி மாவட்டத்தில் 4.3 செ.மீ. மழை பதிவாகியுள்ளதோடு பின்வரும் விவரப்படி கனமழை முதல் அதி கனமழை பதிவாகியுள்ளது.

**அதி கனமழை (> 20.44 செ.மீ.)**

மணிமுத்தாறு மற்றும் பாபநாசம் அணைகளின் நீர்ப்பிடிப்பு பகுதிகளில் பெய்த கனமழையின் காரணமாக தாமிரபரணி ஆற்றில் 7000 கனஅடி உபரிநீர் திறந்து விடப்பட்டுள்ளதைத் தொடர்ந்து திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களின் தாமிரபரணி ஆற்றின் கரையோர பகுதிகளில் வசிக்கும் பொதுமக்கள் பாதுகாப்பாக இருக்குமாறு பொதுவான எச்சரிக்கை நடைமுறை மூலம் 2.91 இலட்சம் நபர்களுக்கு எச்சரிக்கை குறுஞ்செய்திகள் அனுப்பப்பட்டுள்ளது. தாமிரபரணி ஆற்றில் உபரிநீர் திறந்து விடப்பட்டுள்ளதால் பொதுமக்கள் ஆற்றில் குளிப்பதையும், வெள்ளநீர் செல்வதை வேடிக்கை பார்ப்பதையும், நீர்நிலைகளில் நின்று செல்பி எடுப்பதையும் தவிர்க்குமாறு எச்சரிக்கப்படுகிறார்கள். மேலும், தென் மாவட்டங்களுக்கு கனமழை எச்சரிக்கை வரப்பெற்றுள்ளதைத் தொடர்ந்து தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுரையின்படி, அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ள மாவட்ட ஆட்சியர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

மேலும், அரபிக்கடல் பகுதியில் குறைந்த காற்றழுத்த தாழ்வு பகுதி உருவாகியுள்ள நிலையில் மீனவர்களுக்கு பின்வருமாறு எச்சரிக்கை வழங்கப்பட்டுள்ளது.

- 30.12.2023 மற்றும் 31.12.2023 - குமரிக்கடல் பகுதிகள் மற்றும் அதனை ஒட்டியுள்ள மன்னார் வளைகுடா மற்றும் மாலத்தீவு பகுதிகளில் 40-55 கி.மீ. வேகத்தில் காற்று வீசக்கூடும்.
- 01.01.2024 குமரிக்கடல் பகுதிகளில் காற்று 45-65 கி.மீ. வேகத்தில் வீசக்கூடும்.
- 02.01.2024 மற்றும் 03.01.2024 குமரிக்கடல் பகுதிகளில் 40-55 கி.மீ. வேகத்தில் காற்று வீசக்கூடும்.

எனவே, மீனவர்கள் மேற்குறிப்பிட்ட பகுதிகளில் மீன் பிடிக்க கடலுக்கு செல்ல வேண்டாம் என்றும், மேற்சொன்ன பகுதிகளுக்கு மீன் பிடிக்கச் சென்றுள்ள மீனவர்கள் பாதுகாப்பாக இருக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

தென் மாவட்டங்களுக்கு கனமழை எச்சரிக்கை வரப்பெற்றுள்ளதைத் தொடர்ந்து, மாநில அவசர கால செயல்பாட்டு மையம் மூலம் 24 மணி நேரமும் நிலைமை தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகிறது.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### ஆலடி அருணா

**டிசம்பர் 31 (2004)**



தமிழக சட்டப்பேரவை உறுப்பினராக மூன்று முறையும், நாடாளுமன்ற மக்களவை, மாநிலங்களவை உறுப்பினராகவும், தமிழக சட்டத்துறை அமைச்சராகவும், தி.மு.கழகத்தின் செய்தித் தொடர்புச் செயலாளராகவும் பணியாற்றியவர்.

இந்தித் திணிப்பை எதிர்த்து நடைபெற்ற போராட்டத்திலும், விலைவாசி உயர்வு மறியல் போராட்டத்திலும் பங்கேற்று சிறை சென்றவர்.

“இளமைக் காலம் முதல் பகுத்தறிவு இயக்கத்தில் அவர் கொண்ட பற்றும் உறுதியும்; அரசியலில் ஏற்பட்ட மாறுபாடுகளால்கூட சேதாரமடையவில்லை” என தலைவர் கலைஞரால் புகழ்ந்துரைக்கப்பட்டவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**